# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 23 வியாழக்கிழமை 08.08.2024 கதிர் 325







# தமிழ்ப் பொது வேட்பாளராக களமிறங்கும் அரியநேத்திரன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் போட்டியிடவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இன்று காலை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பிலான அறிவிப்பு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந. ஸ்ரீகாந்தாவால் வெளியிடப்பட்டது.

2



## சஜித் தலைமையில் 8 கட்சிகள் கூட்டணி உடன்படிக்கை இன்று கைச்சாத்தானது




எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கூட்டணியான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 08 கட்சிகள் இணைந்துள்ளன.

இந்தக் கட்சிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்களில் இடம்பெற்றது.

பிளவுபடாத ஐக்கிய நாட்டுக்குள் சகலருக்கும் சமவுரிமை கிடைக்க வேண்டுமென்ற கோட்பாட்டின் பிரகாரம் இந்த உடன்படிக்கை

2

## ஜெய்சங்கருடன் பேசியது என்ன? சரத் நாளை விசேட அறிக்கை



முன்னாள் இராணுவத்தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன் முக்கிய பேச்சுக்களை நடத்திய பின்னர் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் தன்னுடைய இந்திய விஜயம் மற்றும் தன்னுடைய எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை சரத் பொன்சேகா நாளை வெளியிடவுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.



### நல்லூரில் இரும்பு தகடுகளால் முற்றாகவே மூடப்பட்ட வீதி

யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயில் வளாகத்தைச் சுற்றி சில மாற்றங்களுடன் இம்முறை வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆலயத்துக்குப் பின்புறம் உள்ள பருத்தித்துறை வீதி இரும்புத் தகடுகளால் முற்றாக அடைக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு நல்லூர் பெருந்திருவிழா நேரங்களில் அதிகரித்த பக்தர்களின் எண்ணிக்கை காரணமாக வீதித்தடைகளில் பல அசம்பாவிதங்கள் ஏற்பட்டு பக்தர்கள் பலர் மயக்கமுற்றதுடன் திருட்டுக்கும் வழிவகுத்தது.

இதன்போது ஒரு சிலர்

2

### தேர்தல் களத்தில் இதுவரை 22 பேர்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தலுக்கு 11 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கட்டுப்பணம் செலுத்தும் காலம் எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடையவுள்ளதாகவும் ஆணைக்குழு மேலும் குறிப்பிடுகின்றது.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த தேர்தல் ஆணைக்குழு செயற்பட வேண்டுமென ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

## சஜித்தின் கூட்டணியில் இணையுங்கள் தமிழ்க் கட்சிகளுக்கு மனோ அழைப்பு



வடக்கு, கிழக்கு தமிழ்கட்சிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும்." என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இன்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்களில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே மனோகணேசன் மேற்படி அழைப்பை விடுத்தார்.

"பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் ஏனைய மதங்களை சேர்ந்தவர்களும், சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்துள்ள இலங்கையர் கூட்டணியாக ஐக்கிய மக்கள் கூட்டணி உள்ளது.

அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுக்கூட கூடிய இடமாக இந்த கூட்டணி உள்ளது.

அதேபோன்று நாட்டை கட்டியெழுப்பக் கூடிய மற்றும் பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்ட அணியும் எம்மிடமே உள்ளது.

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுகளை பெற்றுக்கொள்ள இந்த மகா கூட்டணியில் இணையுமாறும் அழைப்பு விடுக்கிறேன்" என்றார்.

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதித்தடைகளை உடைத்து சென்றதுடன் பொலிஸா ர் தலையிட்டு வீதித்தடைகளைத் தளர்த்த நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஆனால், இம்முறை மீண்டும் குறித்த விடயங்கள் எதுவும் கவனத்தில்கொள்ளாமல் பருத்தித்துறை வீதி இரும்புத் தகடுகளால் முற்றாக அடைக்கப்பட்டுள்ளது.

ஆலய முன் வீதியில் ஆலயத்துக்கு மக்கள் சுதந்திரமான முறையில் நடந்து செல்வதற்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், மாற்றுத் திறனாளிகள் பாதைகளை உபயோகிக்க முடியாதவாறும் இராணுவச் சோதனைச் சாவடிகள் போன்ற அமைப்பையுடைய புதிய வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று விமர்சனங்கள் கிளம்பியுள்ளன.

பொதுமக்கள் அதிகளவில் வரும்போது வீதிகளில் இவ்வாறு தடைகளை ஏற்படுத்துவது தேவையற்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்பதால் முடிந்தவரை தடைகளைத் தளர்த்த யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகர சபையால் பொதுமக்களுக்கு உபிராபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடை தொடர்பில் பல தரப்பினராலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட முறைப்பாடு தொடர்பில் இந்த ஆணைக்குழுவால் கவனம் செலுத்துப்பட்டுள்ளது என்று பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

## தமிழ்பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று அண்மையில் தமிழ் சிவில் சமூகத்திற்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் கைச்சாத்திடப்பட்டது.

இதற்காக தமிழ் மக்கள் தேசிய கட்டமைப்பு ஒன்றும் அமைக்கப்பட்டது.

சிவில் சமூக கட்டமைப்பினருடன் இணைந்து தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், தமிழ் தேசிய பசுமை இயக்கம், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி என்பன ஆதரவளிக்கவுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஜனாதிபதி தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை என்பதுடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது.

## சஜித் தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றது.

ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திர மக்கள் சபை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தயாசிறி ஜயசேகரவின் தரப்பு உட்பட 08 கட்சிகள் கூட்டணியின் பிரதான பங்காளிகளாக உள்ளன.

அதேபோன்று நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும்எம்.பிகளும், பல்வேறு சிவில் அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் இணைந்துள்ளன.

## ஜப்பானில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை

ஜப்பானின் பல பகுதிகளில் இன்று அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.1 ஆக பதிவான நிலநடுக்கத்தை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மியாசாகி கடற்கரையில் இருந்து 20 மைல் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஜப்பானின் நிலநடுக்க கண்காணிப்பு நிறுவனமான நேுசுஜ வெளியிட்டுள்ள தகவலில், இந்த நிலநடுக்கம் ஹியுகா - நாடா கடலில் பதிவாகியுள்ளதாக சொல்லப்படுகிறது

## சீதுவையில் துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி

சீதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொடுகடா பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் காரை சோதனை செய்ய முற்பட்ட போது பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கியை பறிக்க ஒருவர் முயன்றபோது துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

இதில் பொலிஸ் அதிகாரி காயமடைந்துள்ளதுடன், துப்பாக்கியை பற்றிக்க முயன்றவர் உயிரிழந்துள்ளார்

## வாஸ் குணவர்தன உள்ளிட்ட 6 பேருக்கு மரண தண்டனை உறுதி

2013 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வசித்து வந்த கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் ஷியாம் என்பவரை கடத்திச் சென்று கொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 6 பேருக்கு இன்று மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வாஸ் குணவர்தன மற்றும் ஏனைய பிரதிவாதிகள் தம்மை அந்த தண்டனைகளில் இருந்து விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளதுடன் இந்த உத்தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது .

## நல்லூர் கொடிச் சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்றுகாலை இடம்பெற்றது



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாயப் பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயப் பூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அந்தவகையில் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள கொடிச்சீலை உபகாரரின் வீட்டில் இருந்து யாழ் சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல்மடம் முருகன் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறியரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்தது.

அதனை தொடர்ந்து ஆலய வெளிவீதி வலம்வந்து சுபநேரத்தில் கொடிச்சீலைநல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நாளை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25நாட்கள் இடம்பெறவுள்ளது.

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



## பவித்ரா வன்னியாராச்சியும் ரணிலுக்கு ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க நீர்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தீர்மானித்துள்ளார்.

மகிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட பெரும்பான்மை கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த தீர்மானத்தை எடுத்ததாக பவித்ரா வன்னியாராச்சி அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட



காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இலங்கையைப் போல பங்களாதேஷிலும் கிளர்ச்சியை தூண்டியது அமெரிக்காவே

## உதய கம்மன்பில நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

“இலங்கையில் தோற்றம் பெற்ற கோத்தபாய அரசுக்கு எதிரான போராட்டத்தின் பிரதான சூத்திரதாரி அமெரிக்க தூதுவர் ஜூலி சங். அதேபோல் பங்களாதேஷ் மாணவர் போராட்டத்தின் பிரதான சூத்திரதாரி அங்குள்ள அமெரிக்க தூதுவர் பீற்றர் ஹாஸ் என்பது வெகுவிரைவில் வெளிவரும்“ என்று பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த உதய கம்மன்பில, மேலும் பேசுகையில், “பங்களாதேஷில் நடக்கும் போராட்டத்துக்கும், இலங்கையில் நடந்த போராட்டத்துக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன” என்றும் தெரிவித்தார்.

“2022 ஆம் ஆண்டு அரகலய பூமிக்கு சென்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, இராணுவத்தினரை அரசாங்கத்தை பாதுகாக்க கூடாது, போராட்டக்காரர்களை பாதுகாக்க வேண்டும் என்று கூறினார்” என்று உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

“பங்களாதேஷ் நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் இக்பால் கரீம், இராணுவத்தினர் அரசாங்கத்தை பாதுகாக்கக் கூடாது, போராட்டக்காரர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கூறினார். “கோத்தா கோ ஹோம்” என்று குறிப்பிட்டே இலங்கையில் போராட்டம் தோற்றம் பெற்றது. மக்கள் போராட்டத்தை தொடர்ந்து கோத்தபாய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறினார்” என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

“ஆனால் போராட்டம் முடிவடையவில்லை. போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிடுவதற்கு வந்தார்கள். பங்களாதேஷ் சுதந்திர போராட்ட தியாகிகளின் குடும்பத்தாருக்கு அரச சேவையில் முன்னுரிமை வழங்கும் முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய ஒதுக்கீட்டு வீதம் குறைக்கப்பட்டது. இருப்பினும் போராட்டம் முடிவடையவில்லை. இதனால் அந்நாட்டின் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறினார். பங்களாதேஷ் இன்று தீப்பற்றி எரிகின்றது” என்று உதய கம்பன்பில மேலும் தெரிவித்தார்.



# நாளை நல்லூர் கொடியேற்றம் விஷேட போக்குவரத்து ஒழுங்கு





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மஹோற்சவப் பெருந் திருவிழாவை முன்னிட்டு ஆலய வெளிவீதியில் மணல் பரவுதல், ஆலயச் சூழலில் மின்விளக்குகள் பொருத்துதல் ஆகிய பணிகளும், ஆலய உள்வீதியில் மேற்கொள்ள வேண்டிய ஆயத்தப்பணிகளும் கடந்த சில தினங்களாக மும்முரமாக இடம்பெறுவதை அவதானிக்க முடிந்தது.

பெருந் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் அலங்காரப் பந்தல்கள், தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கும் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன.

ஆலய வெளிவீதிச் சூழலைச் சுற்றிச் சிவப்பு, வெள்ளை வர்ணங்களிலான துணிகள் கட்டப்பட்டுச் சேவல் கொடிகளும் பறக்கவிடப்பட்டு ஆலயச் சூழல் விழாக் கோலம் பூண்டுள்ளது.

இதேவேளை, நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ பெருவிழாவை முன்னிட்டு இன்று காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்படவுள்ளது. குறித்த வீதித் தடை செப்டம்பர் 4 ஆம் திகதி மாலை வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ் நகரை அடைய முடியும். என்பதுடன் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வீதித்தடைகளை அமைப்பது தொடர்பாக துறைசார் அதிகாரிகளால் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது. யாழ் மாநகர ஆணையாளர் என்.கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், மாநகர சபை அதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டனர்.









# இஸ்ரேலின் ஆக்ரோஷ அணுகுமுறை அதிகரிக்கின்ற போர்ப் பதற்ற நிலை

**பதிலடி என்கிற பெயரில் காஸாவில் இதுவரை 40,000 பேரை இஸ்ரேல் கொன்றழித்திருக்கிறது. அமைதிப் பேச்சுவார்த்தைகள் இதுவரை எவ்விதப் பலனையும் அளிக்காத நிலையில், ஹமாஸ், ஹெஸ்புல்லா அமைப்புகளின் தலைவர்களைக் குறிவைக்கத் தொடங்கியிருக்கிறது இஸ்ரேல்**

காஸா போரின் தீவிரம் இன்னமும் குறையாத நிலையில், ஹமாஸ், ஹெஸ்புல்லா அமைப்புகளின் தலைவர்களைப் படுகொலை செய்வதன் மூலம் மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் பதற்றத்தை மேலும் அதிகரித்துவருகிறது இஸ்ரேல். இஸ்ரேல் – பாலஸ்தீனப் பிரச்சினை பல ஆண்டுகளாக நீடித்துவரும் நிலையில், 2023 அக்டோபர் 7இல் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து நிலைமை மேலும் படுமோசமானது.

பதிலடி என்கிற பெயரில் காஸாவில் இதுவரை 40,000 பேரை இஸ்ரேல் கொன்றழித்திருக்கிறது. அமைதிப் பேச்சுவார்த்தைகள் இதுவரை எவ்விதப் பலனையும் அளிக்காத நிலையில், ஹமாஸ், ஹெஸ்புல்லா அமைப்புகளின் தலைவர்களைக் குறிவைக்கத் தொடங்கியிருக்கிறது இஸ்ரேல்.

ஈரானின் புதிய அதிபராகப் பதவியேற்றிருக்கும் மசூத் பெஸெஷ்கியான், மேற்கத்திய நாடுகளுடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்பவர் எனக் கருதப்படுபவர். அவரது பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஹமாஸ் அரசியல் பிரிவின் தலைவர் இஸ்மயீல் ஹனியேவை ஈரானிலேயே வைத்துப் படுகொலை செய்திருக்கிறது இஸ்ரேல்.

அதற்கு முதல் நாளில் (ஜுலை 30), லெபனான் தலைநகர் பெய்ஷரூட்டில் ஹெஸ்புல்லா அமைப்பின் தளபதி ஃபுவாத் /குர் கொல்லப்பட்டார். முன்னதாக ஜுலை 13இல் ஹமாஸ் ராணுவத் தளபதி முகமது டெய்ஃப் இஸ்ரேலால் படுகொலை செய்யப்பட்டார்.

பேச்சுவார்த்தை மூலம் சண்டை நிறுத்தத்தைச் சாத்தியமாக்கும் திறன் கொண்டவரான ஹனியேவின் இழப்பு பாலஸ்தீனத்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. பாலஸ்தீனப் பகுதிகளில் யூதக் குடியிருப்புகளை அமைப்பது, தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் காரணம் சொல்லி, அப்பாவி பாலஸ்தீனர்களைக் கொன்றழிப்பது போன்றவற்றை முடிவுக்குக் கொண்டுவர விருப்பம் இல்லாத இஸ்ரேல், தொடர்ந்து பாலஸ்தீனத்துக்கு ஆதரவான அமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதை ஒரு உத்தியாகவே கைக்கொண்டிருக்கிறது.

இதற்கு முன்னர் ஹமாஸ் அமைப்பின் நிறுவனர் ஷேக் அஹ்மது யாஸின் (2004) உள்ளிட்ட பல ஹமாஸ் தலைவர்களை இஸ்ரேல் படுகொலை செய்திருக்கிறது. அதே வேளையில், இது ஒரு வகையில் இஸ்ரேலின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

யாஸின் காலத்தில் சௌதி அரேபியாவுடனான உறவில் ஹமாஸ/க்குக் கிடைத்த ஆயுத உதவிகளைவிடவும், அவருக்குப் பின்னர் அரசியல் பிரிவின் தலைவர் பொறுப்பை ஏற்ற காலித் மெஷால் காலத்தில் - ஈரானுடனான நெருங்கிய நட்பில் கிடைத்தவை ஏராளம். தற்போது காலித் மெஷால் மீண்டும் ஹமாஸ் அரசியல் பிரிவின் தலைவராவார் என ஊகங்கள் வெளியாகியிருக்கின்றன.

அதேபோல், 1992இல் ஹெஸ்புல்லா அமைப்பின் பொதுச் செயலாளர் அப்பாஸ் அல்–முஸாவி இஸ்ரேலால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு வந்த ஹஸன் நஸ்ரல்லா, இன்னும் தீவிரமாகச் செயல்பட்டு, ஹெஸ்புல்லா அமைப்பை வலுப்படுத்தினார்.

ஹெஸ்புல்லாவின் ஆயுத பலத்தை அதிகரித்த தளபதியான ஃபுவாத் /குரை வளர்த்துவிட்டவர் நஸ்ரல்லாதான். ஆரம்பத்தில், சிறிய அளவிலான அமைப்பாகவே இருந்த ஹெஸ்புல்லா, பின்னாளில் இஸ்ரேலுக்குச் சவால் விடும் வகையில் வளர்ந்ததற்குக் காரணம், பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காத இஸ்ரேலின் அணுகுமுறைதான்.

அரசியல் ரீதியில் பின்னடைவைச் சந்தித்துவரும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யா/ஹ, இப்படியான நடவடிக்கைகள் மூலம் தனது செல்வாக்கை மீட்டெடுத்துக்கொள்ள நினைக்கிறார்.

இவ்விஷயத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளும், ஐநா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும் காத்திரமான எந்தத் தீர்வையும் எட்டிவிடவில்லை. மொத்தத்தில், இஸ்ரேல் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாதவரை மேற்கு ஆசியாவில் போர்ப் பதற்றம் இன்னும் அதிகரிக்கும். அது இலங்கை, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளைப் பல்வேறு வகைகளில் பாதிக்கும்!



# அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டம் தயாராகவே உள்ளது

## ஊடக பிரதானிகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகை யில் ஒரு முன்மொழிவு தயாரிக் கப்பட்டுள்ளது. இதை நாம் அவசரமாக செயல்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார்.

கொழும்பு சினமன் கிரேன்ட் ஹோட்டலில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக பிரதானிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதியிடம் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதை நீங்கள் எவ்வாறு கையாள்கிறீர்கள், மற்றும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி திட்டங்கள் என்ன, என்ற கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

ஜஜனாதிபதி இங்கு மேலும் கூறுகையில், "இரா. சம்பந்தனின் இறுதிக் கிரியையின் போது அதுபற்றி நான் தெளிவாக எடுத்துரைத்தேன். மேலும், தமிழ் எம்.பி.க்கள் மற்றும் ஏனைய கட்சிகளுடன், குறிப் பாக அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து, அனை வரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளது" என்றும், "எதிர்காலத்தில் அது குறித்து கலந்துரையாடுவோம்" என்றும் தெரிவித்தார்.

இதனை அவசரமாக செயல்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அரசியல்ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டும். எனவே இந்த பிரச்சினைகளை நாம் முடிக்க வேண்டும்" என்றும் வலியுறுத்திக் கூறினார்.

"பெரும்பான்மையானவர்கள் எனது முன்மொழிவுகளை ஆதரிப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கும் தலைவர்கள் தேவையா அல்லது சவால்களை எதிர்கொள்ளப் பயந்து ஓடுகின்ற தலைவர்கள் தேவையா என்பதே வாக்காளர்கள் முன் உள்ள கேள்வி" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# நாமல் களமிறங்குவதால் அதிருப்தி அமெரிக்கா திரும்ப பசில் முடிவு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷநியமிக் கப்பட்டமையால் ஏற்பட்ட பிளவு காரணமாக கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ இன்னும் சில தினங்களில் அமெரிக்காவுக்குத் திரும்பத் தயாராக வுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரி விக்கின்றன.

இந்த வருடம் பொதுஜன பெரமுனவின்ஜனாதிபதிவேட்பாளராக தம்மை முன்னிறுத்துவதற்கு நாமல் ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்துடன் ராஜபக்ஷ குடும்பத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை தம்மிக்க பெரேரா ஏற்க மறுத்துள்ள நிலையில், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதும், அவர் அதனை நிராகரித்ததையடுத்து நாமல்ராஜபக்ஷ வின் பெயர் முன்மொழியப்பட் டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்குவதற்கு பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் ரணில் பசிலுக்கு இடையே இடம்பெற்றபோதும் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இதனால் கட்சியிலிருந்து வேட்பாளரை நிறுத்துவதற்கு தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதூதாக வெளிப்படையாக அறிவித்துள்ளனர். இறுதியாக மஹிந்த ரணில் சந்திப்பிலும் உடன்பாடு எட்டப்படாத நிலையில் நேற்று கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டுள்ளார்.

கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்தும் யோசனைக்கு ஆரம்பம் முதலே நாமல் ராஜபக்ஷ ஆதரவு தெரிவித்த போதும், பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். தற்போதைய அறிவிப்பின் மூலம் ராஜபக்ஷக்களுக்கு இடையே முரண்பாடுகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா





கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்றையதினம் சிறப்புற இடம்பெற்றிருந்தது.

கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் அவர்களின் தலைமையில் ஆரம்பமான இவ் விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் முரளிதரன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஆ.சு மோகனதாஸ்,மாவட்ட மேசைபந்தாட்ட பயிற்றுனர் ச.குமார் அவர்களும் கிளிநொச்சி மக்கள் அமைப்பின் சார்பில் விளையாட்டு இணைப்பாளர் கலாதரன் ஆகியோரும் அதிதிகளாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் இந் நிகழ்வில் சிரேஸ்ர பொலீஸ் அத்தியட்சகர்,கண்டாவளை பிரதேச செயலர், மாவட்ட புள்ளிவிபரவியலாளர், உதவி மாவட்டச் செயலர், மாகாண விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விளையாட்டு பயிற்றுனர்கள், விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்கள், போட்டியாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




## அனுமதியின்றி கட்டப்பட்டு வந்த மதில்கள் இடித்து அகற்றப்பட்டன



வடமராட்சி பகுதியில் பிரதேச சபையின் அனுமதியின்றி முறைகேடாகக் கட்டப்பட்டு வந்த மதில்கள் நேற்றைய தினம் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் பிரசன்னத்துடன் ஜேசிபி இயந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை (கரவெட்டி பிரதேச சபை) எல்லைக்கு உட்பட்ட நெல்லியடி நகரம், கரணவாய் வடக்கு ஆகிய பிரதேசங்களில் இருவேறு காணி உரிமையாளர்களால் பிரதேச சபையின் உரிய அனுமதியின்றி தொடர்ந்தும் கட்டப்பட்டு வந்த மதில்களே இடித்து அகற்றப்பட்டுள்ளன.

கரணவாய் வடக்கு நவிண்டில் பிரதேசத்தில் உள்ள மதிலொன்றும் நெல்லியடி நகர பஸ் தரிப்பிடத்தின் பின்னால் உள்ள வீடொன்றின் மதிலுமே இவ்வாறு இடித்து அகற்றப்பட்டது.

சமீப காலமாக அனுமதி பெறாமல் கட்டடங்கள், மதில்கள் கட்டப்பட்டு வருகின்றமை அதிகரித்து வருவதாகவும், இதனால் இவற்றைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் பிரதேச சபையிடம் முறையிட்டு வந்தனர்.

இது தொடர்பில் பிரதேச சபையினரால் கடந்த ஒரு வருடமாக சம்பந்தபட்டவர்களுக்கு நேரடியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு பல்வேறு கடிதங்களும் வழங்கப்பட்டு வந்த நிலையிலும் அவற்றை மீறித் தொடர்ந்து முறைகேடான விதத்திலும் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் பொது வீதிகளை ஆக்கிரமிக்கும் வண்ணமும் குறித்த மதில்கள் கட்டப்பட்ட காரணத்தினால் இவை இடித்து அகற்றப்பட்டதாக பிரதேச சபைத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.






# நிதி திரும்பி செல்வதற்கு அதிகாரிகளே காரணம்

**யாழில் விஜயதாச தெரிவிப்பு**

யாழ்ப்பாணத்திற்கு நேற்று புதன்கிழமை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

கோண்டாவில் பகுதியில் BCS மண்டபத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டார். நிகழ்வில் உரையாற்றுகையில், “பெரமுன கட்சியினர் என்னை தமது கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிட அனுகி இருந்தனர். நான் அதனை மறுத்துள்ளேன். தற்போது இளம் அரசியல்வாதியொருவரை வேட்பளாராக களம் இறக்கியுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் போட்டியிடுவதே எனது இலக்கு.

எனது பெயரிலும் ராஜபக்ச உள்ளமையால் நான் முந்தைய அரசாங்கத்தின் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவன் அல்ல. அந்த ராஜபக்ச குடும்பத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. நாட்டு மக்களுக்கும் இந்த அரசாங்கத்துடன் தொடர்புடையவராகவே என்னை தெரியும். ஆனால்நான்நீதியமைச்சராக சுயாதீனமாகவே இயங்கினேன்.

தற்போதுள்ள அரசாங்கத்தின் மீது மக்கள் முற்றிலும் நம்பிக்கையிழந்துள்ளமையை நான் அறிவேன். அதனால் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் தற்போது நாடாளுமன்ற இருக்கின்றவர்களில் 150க்கும் மேற்பட்டவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள். அதேவேளை வடக்கு கிழக்கில் அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட நிதிகளில் 50 வீதத்திற்கும் அதிகமான நிதி திரும்புகிறது. வடக்கு, கிழக்கு அதிகரிகளின் ஒத்துழைப்பு இல்லாமையே அதற்கு காரணம் என தெரிவித்தார்.

# கல்விப் பணிப்பாளர் நியமனத்தை துரிதப்படுத்துங்கள்

ஏற்கனவே விண்ணப்பம் கோரப்பட்ட மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தை துரிதப்படுத்துமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகஷூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபில்யூ.ஜி.திசாநாயக்கவைக் கேட்டுள்ளார்.

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு தகுதியானவர்களிடம் இருந்து கடந்த ஜ/ன் மாதம் விண்ணப்பம் கோரப்பட்டது. இதனடிப்படையில் சிலர் விண்ணப்பித்துள்ளதாக அறிய முடிகின்றது. எனினும் இதுவரை இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படவோ அல்லது இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கான வேறு நடவடிக்கைகளோ முன்னெடுக கப்படவில்லை என மூதூர் கல்விச் சமுகம் எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது. மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத் தாமதமானது சமுகங்களிடையே வீண் சந்தேகங்களைத் தோற்றுவிப்பதற்கு காரணமாக அமைவதால் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே இவ் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பம் கோரியிருப்பதாலும் இது வழமையான நிர்வாக நடைமுறை என்பதாலும் இதனை முன்னெடுப்பது தேர்தலுக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

எனவே, பொருத்தமான ஒருவரை மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்ய தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2024இல் வெளியிடப்பெற்றது.